**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**இரண்டாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2023**
**P202 சமயத் தமிழ் இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண் . பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும் . விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும் . ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக. (15x1=15)**

1. சைவம் என்பதன் விளக்கம் யாது?
2. திருமுறை என்பதன் பொருள் யாது?
3. சோழ மன்னன் சேக்கிழார் காலத்தில் விரும்பிப் படித்த காப்பியம் எது?
4. திருவருட்பாவின் ஆசிரியர் யார்?
5. தொல்காப்பியர் காட்டும் காடுறை உலகத்தின் கடவுள் யார்?
6. முப்பத்தாறாயிரப்படி – அருளியவர் யார்?
7. "கவிக்கு நிறை பொருளாய் நின்றான்" எனப் பாடியவர் யார்?
8. 'அக்காரக்கனி' என்பது யாரைக் குறிக்கும்?
9. பெருங்கதையின் ஆசிரியர் யார்?
10. யாப்பு இலக்கணத்திற்குச் சமணர் தந்த நூல்கள் யாவை?
11. நரிவிருத்தம் எந்தக் கோட்பாட்டை விளக்க இயற்றப்பட்டது?
12. அறவோர் பள்ளி என்பது எதைக் குறிக்கிறது?
13. கிருத்தவக் கவிதைகளில் வெளிப்படும் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகள் சிலவற்றைக் குறிப்பிடுக.
14. 'எளிமையே இறைவன் விரும்பும் கோலம்' என்பதை எந்தச் சிறுகதை உணர்த்துகிறது?

15. இஸ்லாமிய மெய்ஞ்ஞானி மேற்கொள்ளும் ஆன்மீகப் பயணத்தில் முதற்கண் வேண்டுவது யாது?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.** **(5x3=15)**

1. பிறவா யாக்கைப் பெரியோன் என்ற தொடர் இடம் பெறும் நூல் எது? அது யாரைக் குறிக்கும்?
2. முப்பெரும் புராணங்கள் எவை?
3. நாலாயிரத்தை நாத முனி எத்தனை வகைப்படுத்துகிறார்? அவை யாவை?
4. வைணவச் சான்றோர்கள் அருளிய சிற்றிலக்கியங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.
5. திருக்குறளுக்கு அடுத்து அறநூல்களில் சிறப்புப் பெறும் நூல் எது? அதன் சிறப்புக்குரிய காரணம் யாது?
6. பக்தி இயக்கம் மக்களைக் கவர என்ன காரணம்?
7. பெண் மேம்பாட்டுக்குக் கிறித்தவப் புதினங்களின் பங்களிப்பினை விளக்குக.
8. சிலேடையைச் சமய நல்லிணக்கத்துக்காகப் பயன்படுத்திய இஸ்லாமியப் புலவர் யார்? எவ்வாறு?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) சங்க இலக்கியத்தில் உள்ள சிவன் பற்றிய செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) பன்னிரு திருமுறைகள் குறித்துக் கட்டுரை தருக.

2. (அ) பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்அறநூல் என்பதை நிறுவுக.

(அல்லது)

(ஆ) சங்க இலக்கியத்தில் சமணம் குறித்த செய்திகளைத் தொகுத்துரைக்க.

3. (அ) சிற்றிலக்கியங்கள் சமண சமயம் தந்த கொடை என்பதை நிறுவுக.

(அல்லது)

(ஆ) இஸ்லாமியத் தமிழ்ச் சிற்றிலக்கியங்களின் சிறப்புகளை எழுதுக.

***